


சமத்துவம் , சமதர்மம் , சகோதரத்துவம் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் நடத்தும் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி விழுப்புரம் தெற்கு மாவட்டம் காணை பகுதியில் முகமது இப்ராஹிம் தலைமையில், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாவட்ட செயலாளர் அமீர் அப்பாஸ் , அப்துல் அக்கீம், அப்துல் சத்தார் காஷீபி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்து கொண்டு இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி , சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் அ.சிவா, ம.ஜெயச்சந்திரன், இரா. ஜனகராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### தலைவர் – முதல்வர் பிறந்த நாள் விழா! எஸ்.வி.சுரேஷ் ஏற்பாடு! பூ.சுப்பிரமணியன் தலைமை

# நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் 2000 பேருக்கு நல உதவிகள் - பொதுக்கூட்டம்!

### நா.எழிலன் – மு.அப்துல் வகாப்– டி.பி.எம்.மைதீன்கான் – சூர்யா கிருஷ்ணமூர்த்தி – திலீப் ராஜகண்ணப்பன் சிறப்புரை!

நெல்லை, மார்ச் 18 -

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் விழா 2000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் மாபெரும் பொதுக்கூட்டம் நெல்லை சந்திப்பு சிந்துபூந்துறையில் நெல்லை மத்திய மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.வி.சுரேஷ் ஏற்பாட்டில் தச்சை பகுதி செயலாளர் பூ.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாநில மருத்துவர் அணி செயலாளர் மருத்துவர் நா.எழிலன் எம்.எல்.ஏ. நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ.சிறுபான்மை நல உரிமைப் பிரிவு தலைவர் டி.பி.எம்.மைதீன் கான், மாநில செய்தி தொடர்பு இணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் திலீப் ராஜ கண்ணப்பன் ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர்.

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் 72 வது பிறந்த நாள் விழா 2000 பேர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் மாபெரும் பொதுக்கூட்டம் ஆகிய முப்பெரும் விழா நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் மத்திய மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.வி சுரேஷ் ஏற்பாட்டில் சிந்துபூந்துறையில் தச்சை பகுதி செயலாளர் பூ.சுப்பிரமணியன் தலைமையில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணி யன், பாலமுருகன் என்ற பிரபு, சுதா மூர்த்தி, அப்துல்கையூம், அண்ணாதுரை ஆகியோர் முன்னிலையில் நடை பெற்றது. தச்சை பகுதி துணை செயலாளர் 12 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோகுல வாணி சுரேஷ் வரவேற்புரையாற்றினார்.கழக பேச்சாளர் நெல்லை முத்தையா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ.மாநில செய்தி தொடர்பு இணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, சிறுபான்மை நல உரிமை பிரிவு தலைவர் டி.பி.எம்.மைதீன்கான், மாநில மருத்துவரணி துணைச் செயலாளர் திலிப் ராஜ கண்ணப்பன் ஆகியோர் உரையாற்றினர்.

அதன் பின்னர் மாநில மருத்துவ அணி செயலாளர் மருத்துவர் நா. எழிலன் எம்.எல்.ஏ.பேசியதாவது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு மருத்துவம் பார்த்ததால் சட்டமன்ற உறுப்பினர் ஆனேன். கலைஞர் அவர்கள் சிந்தனை எல்லாம் பெண்கள் முன்னேற வேண்டும் என்பதுதான்.

**வாக்களிக்காதவர்களும் பயன் பெற்றுள்ளனர்!**

இந்த 12 வது வார்டில் 3 கோடிக்கு திட்டப் பணிகள் நடைபெற்றுள்ளது.

ஆனால் ஓட்டுகள் பாதி தி.மு.க.வுக்கும் பாதி பா.ஜ.க.வுக்கும் விழுந்துள்ளது. அதிகமாக உதவிகள் செய்துள்ளோம்,எங்களுக்கு வாக்களிக்காதவர்களும் பயன் பெற்றுள்ளனர் அதுதான் திராவிட மாடல் ஆட்சியாகும்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பெண்களின் முன்னேற்றத்தை தனது சிந்தனையில் வைத்து அவர்களுக்காக பல திட்டங்களை தந்து ஆட்சி செய்தார்கள். அந்த ஆட்சியின் நீட்சி தான் தற்போது நடக்கும் திராவிட மாடல் ஆட்சி, நெல்லை, தூத்துக்குடி, தென்காசி ஆகிய மாவட்டங்கள் பெரும் வெள்ளத்தில் பாதித்த போது ஒன்றிய மோடி அரசிடம் முதலமை ச்சர் அவர்கள் உயிர் காப்பதற்காக 35 ஆயிரம் கோடி நிதியை கேட்டார். ஆனால் அவர்கள் நிதியை கொடுக்கவில்லை. நிதி பகிர்வு மட்டும் அல்லாது தொடர்ந்து தமிழகத்தை வஞ்சித்து வரும் ஒன்றிய அரசை எதிர்த்து நமது முதலமைச்சர் அவர்கள் போராடி வருகிறார்.நிதி பற்றாக்குறை இருந்த நிலையிலும் தமிழக மக்களுக்காக ஏராளமான திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

**தரமான, சத்தான காலை உணவுத் திட்டம்!**

இங்கு எல்லோரும் மாமன் மச்சான் என்று உறவை கட்டிக்காத்து வருவதற்கு காரணம் திராவிட மாடல் உதய சூரியன் சின்னம் காரணமாகும். இன்று 20 லட்சம் குழந்தைகள் பயன்பெறும் வகையில் தரமான சத்தான காலை உணவு திட்டம் , மகளிர் உரிமைத் தொகை,பெண் குழந்தைகள் உயர்கல்வி படிக்கும் வகையில் புதுமைப்பெண் திட்டம், மாணவர்களுக்காக தமிழ் புதல்வன் திட்டம் என பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது . ஆனால் பா.ஜ.க ஆளும் மாநிலங்களில் இது போன்ற சிறப்பு மிகுந்த திட்டங்கள் செயல்படுத்தப் படுகிறதா என்றால் இல்லை.நாம் திராவிட மாடல் ஆட்சி நடத்துகின்றோம்,அவர்கள் ஆரிய மாடல் ஆட்சி நடத்துகிறார்கள்,நாம் சமூக நீதி ஆட்சி நடத்துகின்றோம் அவர்கள் மதரீதியாக ஆட்சி நடத்தி வருகின்றனர். ஆனால் தமிழகத்தில் பா.ஜ.க.வின் மதவாத உத்தி எடுபடாது இங்கு அனைவரும் சமம் சமூக நீதியோடு சகோதரத்துவ உணர்வோடு வாழக்கூடிய மாநிலம் ஆகும்.

**கல்வியை சீர்குலைக்கும் பா.ஜ.க. அரசு!**

தமிழக அரசு மகளிர் உரிமைத் தொகை,புதுமைப்பெண் திட்டம் என பல்வேறு திட்டங்கள் மூலம் மாதந்தோறும் மக்களின் வங்கி கணக்கில் பணத்தை செலுத்தி வருகிறது.உதாரணமாக சொல்ல வேண்டுமென்றால் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் வீதம் ஆண்டுக்கு ரூபாய் 12000,ம் 3 ஆண்டுகளுக்கு 36,000 ம் ரூபாய் அவர்களது வங்கிக் கணக்கில் விழுகிறது.ஆனால் ஜி.எஸ்.டி. வரி உட்பட பல்வேறு வழிகளில் ஒன்றிய மோடி அரசு மக்களின் வங்கிக் கணக்கில் இருந்து பணத்தை பிடுங்கும் செயலில் ஈடுபட்டு வருகிறது. பணத்தை பிடுங்குவது ஆரியமாடல் அரசு,பணத்தை போடுவது திராவிட மாடல் அரசு.நீட் தேர்வை கொண்டு வந்து ஏழை,எளிய மாணவர்களின் மருத்துவக் கனவை தகர்த்தனர். தற்போது புதிய கல்விக் கொள்கையின் மூலம் ஏழை,எளிய மாணவர்களின் ஆரம்ப நடுநிலை கல்வியையும் சீர்குலைக்க பார்க்கின்றனர். இங்கு பெண்கள் உள்ளிட்ட ஏராளமான பொது மக்கள் வந்துள்ளீர்கள். பெண்கள் அதிகாரத்துக்கு வரணும் இதுதான் நமது சித்தாந்தம்.எந்த ஆட்சியின் மூலம் உங்களுக்கு திட்டங்கள்கிடைக்கின்றது என்பதை உணர்ந்து மீண்டும் யார் ஆட்சிக்கு வர வேண்டும் என்பதை முடிவு செய்யுங்கள்.கடந்த முறை செய்த தவறுகளை செய்யாமல் திராவிட மாடல் ஆட்சிக்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் உங்களுக்காக என்றும் உழைக்கக் கூடியவர் நம் முதலமைச்சர் அவர்கள் தான்.அவர்களுக்கு உறுதுணையாக துணை முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள். உதய சூரியன் என்றும் உங்கள் சின்னமாகும்.

இவ்வாறு அவர் பேசினார்.

அதனை தொடர்ந்து 2000ம் பேர்களுக்கு தையல் இயந்திரம், சலவை பெட்டி, மிக்சி, சேலை உள்பட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

நிகழ்வில் மேயர் ராமகிருஷ்ணன், மாவட்டத் துணைச் செயலாளர் கிரிஜா குமார், மானூர் ஒன்றிய செயலாளர்கள் அன்பழகன், மாரியப்பன், அருள்மணி, பகுதி செயலாளர்கள் அண்டன் செல்லதுரை, துபாய் சாகுல், மண்டல தலைவர்கள் ரேவதிபிரபு, கதிஜா இக்லம்பாசிலா, முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் ஆ.க. மணி, மாவட்டப் பிரதிநிதி வல்லநாடு முத்து, வெள்ளைச்சாமி பாண்டியன், வேங்கை வெங்கடேஷ், கார்டன் சேகர் முகமது அலி,கழக நிர்வாகிகள் மீரான் மைதீன்,சபி முகமது மிக்கேல், சகாய ஜூலியட்,ரேவதி அசோக், பேச்சியம்மாள்,அனிதா,சௌந்தர முத்துராஜ்,பிந்து செய்யது யாஸ்மின், ஹமிதா, ஆனி ரேக்லண்ட், மணிகண்டன்,காசிமணி,சாய்பாபா கழகப் பேச்சாளர்கள் பிரிட்டோ அலெக்ஸாண்டர், கவிஞர் மூர்த்தி, மைக் மணி,நெல்லை ரவி, நெல்லை மணி, பாம்பு கிருஷ்ணன், திராவிட மணி, மில் ஜே.குமார், இளம் பேச்சாளர் சே.ரகுமாள் உள்பட மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பகுதி,ஒன்றிய,பேரூர்,கழக நிர்வாகிகள்,சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்,நிர்வாகிகள்,கழக முன்னோடிகள், தொண்டர்கள் பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் தலைமைக் கழகப் பேச்சாளர் சி.பா.இராவணன் நன்றியுரையாற்றினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா ஏ. சுப்ரமணியன்

### மார்ச் 18 (2012)



காஞ்சிபுரம் நகரக் கழகச் செயலாளராக நான்கு முறையும், தலைமைச் செயற்குழு உறுப்பினராக நான்கு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு கழகப் பணியினை சிறப்பாக மேற்கொண்டவர்.

நகர்மன்ற துணைத் தலைவராகவும், பெருநகர மன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

நெருக்கடி நிலைக் காலத்தில் ஒரு வருடம் மிசா கைதியாக சிறையில் இருந்தவர். இதுதவிர கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

## இந்திய ராணுவத்தில் ஆட்சேர்ப்பு!

சென்னை, மார்ச்.16–

இந்திய ராணுவத்தில் நடப்பாண்டுக்குரிய ஆட்சேர்ப்புக்கான அறிவிக்கை வெளியாகியுள்ளது. ராணுவத்தின் ஆட் சேர்ப்பு அலுவலக சென்னை தலைமையகம் சார்பில் இந்த அறிவிக்கை www.joinindia narmy.nic.in என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கடலூர், வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, சென்னை, திரு வள்ளூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்கள், புதுவை யூனியன் பிரதேசத்திலிருந்து புதுச்சேரி மாவட்டம் மற்றும் அந்தமான் & நிக்கோபார் தீவுகளின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள திருமணமாகாத ஆண்கள், பெண்கள் ஆகியோர், தங்கள் விண்ணப்பங்களை இந்த இணைய தளத்தின்மூலமாக ஆன்லைனில் சமர்ப்பிக்கலாம்.

அக்னிவீர் பொதுப் பணி, அக்னிவீர் தொழில்நுட்பம், அக்னிவீர் எழுத்தர்/ஸ்டோர்கீப்பர் தொழில்நுட்பம், அக்னிவீர் டிரேட்ஸ்மேன் (10 ஆம் வகுப்பு தேர்ச்சி), அக்னிவீர் டிரேட்ஸ்மேன் (8 ஆம் வகுப்பு தேர்ச்சி), சிப்பாய் நிலையிலான தொழில்நுட்ப நர்சிங் உதவியாளர், சிப்பாய் நிலையி லான பார்மா, அக்னிவீர் பொதுப் பணி (ராணுவ மகளிர் காவல்) ஆகிய பிரிவுகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தேர்வர்கள், அக்னிவீர் பணியிடத்துக்கு தங்கள் தகுதியின் அடிப்படையில் ஒரேநேரத்தில் ஏதேனும் இரண்டு பிரிவு களுக்கு விண்ணப்பிக்கலாம். பொதுத்தகுதித்தேர்வு ஆன்லைன் முறையில் தமிழ் உட்பட 13 மொழிகளில் நடத்தப்படும். ஐடிஐ, டிப்ளமோ முடித்தவர்கள் மற்றும் என்சிசி தகுதி பெற்ற விண்ணப்பதார ர்களுக்கு இதில் போனஸ் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

## உலகுக்கு நாகரிகத்தை கற்றுக் கொடுத்த இனம் தமிழினம்! எம் மாமுதல்வர் இருமொழிக் கொள்கையை ஏற்க!

உலகத்துமாந்தர்களின் உச்சத்தின் உச்சமே-தலைமை
உன்னதத் தமிழர்களின் நாகரிகம் உச்சமே!
கலகம்செய்அடிதடிகள் சண்டைகள் குகைவாழ்ந்த
கற்காலமுதல்பிறநாடுகள் மனிதர்கள் வாழ்க்கையில்
நிலவரைதாம் காட்டுமிராண் டிகளாகவே-மக்கள்தாம்
நீநிலத்தில் வாழ்ந்திட்டபோதினிலேஎம்தமிழர்
நலம்தரும்வெல்நாகரிகத்தின் உச்சமாக-வாழ்ந்ததுஎம்
நல்லினம் தமிழினமே**அறிகபிரதானே!** அறிகவே!

நாகரிகம் பண்பாட்டைமுதன்முதல் - வையகத்தில்
நனிகற்றுத் தந்தஇனம் தமிழினமே! தமிழினமே!
போகமும் மோகமும்பொல்லாங்கும் - சூழ்ந்திடுபோதில்
புவனத்தில் அறிவுக்கண் திறந்ததார்?தமிழினமே!
மாகவிவாணர்கள் அறம்பொருள் இன்பத்தை-உலகுதொழ
மனம்கொளும் பகுத்தறிவைஈந்தவர்யார்?தமிழினமே!
ஏகஇருள் சூழ்கல்விஒளிஎழுத்தறிவைமுதன்முதல் -கற்பித்தார்
எம்தமிழர் **அறிகபிரதான் அமைச்சரே**அறிகவே!

அகம்புறம் உணர்த்திடும் அகஒழுக்கம் புறஒழுக்கம் -அறிவீரா!
அகிலத்திற்கே**ஒரேகொடைநூல் திருக்குறள்**தமிழினநூல்!
தகவுடையஉலகபொதுமறைநூலேஉலகினை
தமிழ்மறை**சமநீதிதிராவிடமாதிரி**
மிகமிகுமேல் ஆட்சிமுறைமீதூர்எம் **மாமுதல்வர்** - இஸ்டாலின்
விடிவுதரும் வியப்பாட்சிமேன்மையைக் கண்டீரா?
சிகரமேஎம் தமிழர்தம் நாகரிகம் செப்புமுறை-அறியாமல்
பொய்மையினைஉண்மையென்பீர் **பிரதானே** இதுதகுமா?

**யாரைப் பார்த்துநீர் நாகரிகம் இலையென்றீர்** எம்தமிழர்
நன்றுதரும் பண்பாட்டின் வித்தாகும் படர்வானம்!
ஊரைஉலகத்தைஒருங்கிணைக்கும் பண்பாடுஎம்பாடு
**ஒரேநாடுஅல்லஒரேஉலகம் என்பதுஎம் பண்பாடு!**
ஈரைந்துதிங்கள் சுமந்துபெறும் தாய்வயிற்றுக்-கருவிருந்தே
இதயமாசில் பண்பாடுநாகரிகம் தமிழ்ஒளியே!
யாரைப் பார்த்துநீர்நாகரிகம் இலைஎன்றீர்! -பிரதானே
**நாவடக்கம் வேண்டுமெனும் எம்முதல்வர் கூற்றறிக!**

தேசியஅக் கொள்கையெனச் செம்மையிலாக் கல்விமுறை-ஒன்றியத்தின்
தேவையெனக் கொண்டுவந்தே! ஐம்பதாண்டின் மேலாய்
**வீசுதென்றல் இருமொழிக் கொள்கைதமிழ்**நாட்டினிலே-கொடிய
வீண்புயலைக் கிளப்புதலும் வீம்பலவா?தொடர்ந்தேதான்
மாசுடைமைக் கல்விமுறைதமிழ்நாட்டில் புகுத்தலும்தான்- நன்றோ?
மனச்சான்றே இல்லாமல் மறைமுகமாய் இந்தியினைப்
பேசுதமிழ் நாடுபுகுத்திப்பின்னடையச் சூழ்ச்சிசெய்தலை
பீடுடைமைஎம்முதல்வர் நாசகாரக் கேடுவெல்வார்!

இருமொழிஎம்கொள்கையதோ,தருமொழிப் போர்க்களத்தினிலே -ஈடில்
இடர்ப்பட்டுச் சிறைப்பட்டு இரத்தம்சிந்திவந்ததடா!
ஒருமைப்பாடெனஎம்மின் இருமொழிக் கொள்கைமறுத்தால்
உடன்படோம் **உரிமைத்தொகை**உடன்விடுவித் திடுதல்செய்க!
**தருமேந்திரபிரதானே**தருமம்உம் மன்னிப்பே,போதாதே
**தகைமைஇருமொழிதமிழ் நாட்டுக் கொள்கைஒப்பிடுக!**
**திருத்தலைமைமோடிஇனும் வேடிக்கைபார்க்காமல்**
**தமிழ்நாட்டின் மாமுதல்வர் தகைகொள்கைஏற்றிடுக!**



**பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன்**
உலக அமைப்பாளர் பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்





திண்டிவனத்தில் ஆர்யாஸ் ஹோட்டலில் விழுப்புரம் வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய / நகர / பேரூர் அமைப்பாளர் துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் முன்னாள் அமைச்சர் – மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமையில் மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் மண்டல பொறுப்பாளர் முனைவர் சி.பிரதீப் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்டப் பொருளாளர் ரமணன், நகர செயலாளர் கண்ணன் ஆசிரியர், மாவட்ட அமைப்பாளர் செந்தில் முருகன், மயிலம் மத்திய ஒன்றியச் செயலாளர் செழியன், முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் அசோகன், பொறியாளர் அணி மாவட்ட தலைவர் சி.சக்தி சரவணன், மாவட்டத் துணைத் தலைவர் டி.பி ஏழுமலை, மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஜி.பி.எஸ் முருகன், ரசூல் பாஷா, சிவபிரகாசம், வே.மலையரசன், வெங்கடேச பெருமாள், பி.சரவணன், சி.மோகன் தாஸ், பிரபாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.